**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 249 / 2024** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | **திருமதி.வேணி** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.03.2026**

எதிரி-2 ஆஜர். எதிரி-1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கூழப்பாண்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1 எனது தங்கை ஆவார். 1வது எதிரி பாலமுருகன் என் தங்கையான அசா1ன் மகளின் கணவர் மற்றும் எனது மருமகன். ஆஜர் எதிரி சிவா என்ற சிவராஜ் எங்கள் ஊரைச் சேர்ந்தவர் தான். அசா1ன் மகள் நந்தினி தற்போது உயிருடன் இல்லை. இறந்தவிட்டார். தற்போது நந்தினியின் மகனை, 1வது எதிரியின் அம்மா வளர்த்து வருகிறார். அசா1ன் மகள் நந்தினியை முறைப்படி 1வது எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எனது தங்கையின் கணவர் இறந்துவிட்டார், ஒரே பெண் குழந்தை. அதனால் அவரது திருமணத்திற்கு 40 பவுன் நகையும், சீர் சீராட்டுகள் செய்து திருமணம் செய்து கொடுத்தோம். நந்தினி இறக்கும் போது அவருக்குத் திருமணம் ஆகி 3 ஆண்டுகள் கூட

முடியவில்லை. நந்தினி இறக்கும் போது அவருக்கு 3வயதில் ஒரு ஆண் குழந்தை இருந்தது. அசா1, 1வது எதிரிக்கு பணம் வாங்கிக் கொடுத்திருந்தார். அது சம்பந்தமாக இருவருக்கும் மன கசப்பு இருந்தது. அதனால் நந்தினி என் தங்கை அசா1ன் வீட்டிற்கு வந்து 8 நாட்கள் இருந்தது. என் தங்கை அசா1, நேரம் சரியில்லை என்று ஜாதகம் பார்க்க பேரனைத் தூக்கிக் கொண்டு அழகர்கோவில் பக்கம் நானும் என் தங்கையும் பேரனைக் கூட்டிக் கொண்டு சென்றோம். ஜாதகம் பார்த்துவிட்டு, மாலை 05.00, 05.30 மணிக்கு நான் கூலப்பாண்டியில் இறங்கிவிட்டேன். என் தங்கை அசா1 துவரிமானில் வசித்து வந்தார். என் தங்கை அவரது வீட்டிற்குப் போகும் போது மாலை சுமார் 06.00 மணி இருக்கும். அவர் வீட்டிற்குச் சென்றவுடன் அவரது மகள் நந்தினியைக் காணவில்லை என்று எனக்கு போன் அடித்தார். அக்கா, என் மகளைக் காணோம், வீடு பூட்டி இருக்கு என்று சொல்லி அழுந்தாள். நான் என் தங்கையிடம், நந்தினியின் கணவர் வந்து கூட்டிப் போயிருப்பார் என்று சொல்லி, அவருக்கு போன் அடிக்கச் சொன்னேன். அதற்கு 1வது எதிரி, உன் மகளை நான் கூட்டி வரவில்லை என்று சொல்லிவிட்டார். நாங்கள் உடனே நாகமலைபுதுக்கோட்டை ஸ்டேசனுக்குப் போனோம். அங்கு என் தங்கை ரிப்போர்ட் பண்ணாள். போலீஸ் ஸ்டேசனில் 1வது எதிரியைக் கூட்டிக் கொண்டு வந்து விசாரித்தார்கள். அப்போதும் 1வது எதிரி என் தங்கை மகளைக் கூட்டிச் செல்லவில்லை என்று சொன்னார். அக்கம் பக்கம் விசாரித்த போது, சிவா என்ற சிவராஜ் தான் என் தங்கை மகளைக் கூட்டிச் சென்றதாகச் சொன்னார்கள். ஸ்டேசனில் சிவா என்ற சிவராஜின் பெற்றோர்களை வரச்சொல்லி விசாரித்து, 3 நாட்களுக்குள், நந்தினியையும் 2வது எதிரியையும் ஸ்டேசனில் வந்து ஒப்படையுங்கள் என்று சொன்னார்கள். 2வது எதிரியும், நந்தினியும் ஸ்டேசனில் ஆஜரானவுடன், எங்களுக்கு போலீசார்

தகவல் சொன்னார்கள். நான், என் தங்கை மற்றும் சொந்தக்காரர்களுடன் காவல் நிலையத்திற்குப் போனோம். அங்கு காவல்நிலையத்தில் நந்தினியை மட்டும் எங்களிடம் காண்பித்தார்கள். நான் நந்தினியிடம், வீட்டிற்கு வந்துவிடும்மா, உனக்கு ஒரு பையன் இருக்கிறான் என்று சொல்லி அழுது கூப்பிட்டேன். நந்தினியின் கழுத்தில் நாங்கள் போட்ட தாலி, நகைகள் இல்லாமல் புதியதாக மஞ்சள் கயிறு போட்டிருந்தார். அப்போது நந்தினி என்னிடம், அம்மா எனக்கும் சிவாவிற்கும் கல்யாணம் ஆகிவிட்டது, நான் அவரோடு தான் வாழ்வேன் என்று சொல்லிவிட்டார். நான் ஆத்திரப்பட்டு, நந்தினியிடம், நம்ம ஜாதி முறையையே கெடுத்துவிட்டாயே, நாங்கள் போட்ட செயின் எங்கே என்று கேட்டேன். நந்தினி சிவாவுடன் போகும் போது 5 பவுன் செயினையும், பணம் ரூ.75,000/-ஐயும் தூக்கிக் கொண்டு சென்றுவிட்டார். சிவா மற்றும் அவரது பெற்றோர்களை போலீஸ் நிலையத்தில் விசாரித்தபோது, அவர்கள் 5 பவுன் நகையையும், பணத்தையும் எடுத்துச் சென்றதை ஒப்புக் கொண்டார்கள். சிவா போலீசாரிடம், அந்த பிள்ளையுடன் தான் வாழ்வேன் என்று சொன்னார். நாங்கள் நகையையும், பணத்தையும் கேட்டோம். அப்போது சிவாவின் பெற்றோர் நகையையும் பணத்தையும் மெட்ராசில் வைத்திருக்கிறோம் என்றும் ஒரு வாரத்தில் திரும்ப தருகிறோம் என்று வாக்கு கொடுத்துவிட்டு சென்றார்கள். நந்தினியிடம் தாலி எங்கே என்று கேட்டபோது, தாலியைக் கழற்றி உண்டியலில் போட்டுவிட்டு புதிய தாலி கட்டிக் கொண்டோம் என்று சொன்னவுடன், 1வது எதிரி அவரது மகனைக் கூட்டிக் கொண்டு மனம் உடைந்து போய்விட்டார். நந்தினிக்கும் சிவாவிற்கும் அவர்களது 4,5 நண்பர்கள் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்துள்ளார்கள். என் மகள் போய் 15 நாட்கள் ஆகியது. மெட்ராசில் வைத்திருந்தார்கள். கருங்காலக்குடிக்கு அருகில் வஞ்சிப்பட்டியில் கூட்டிக்

கொண்டு வந்து., எங்கள் பெரியம்மா வீரம்மாள் வீட்டின் அருகில் நந்தினியை விட்டுவிட்டு, 2வது எதிரி சென்றுவிட்டார். நான் 2 நாட்களில் பேசிவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு 2வது எதிரி சொல்லிவிட்டுச் சென்றுள்ளார். நந்தினி. 2வது எதிரிக்கு போன் செய்து பார்த்த போது போன் switchoff ஆகிவிட்டது. என் தங்கை வீட்டை மருமகனான 1வது எதிரி இடித்துவிட்டதாக நாகமலைபுதுக்கோட்டை போலீசாரிடம் ரிப்போர்ட் செய்தோம். அவர்கள் 1வது எதிரியைக் கூட்டிக் கொண்டு வந்து இரவு 08.00 மணி வரை விசாரணை நடந்தது. நான் வரவேயில்லை, நான் வீட்டை இடிக்கவேயில்லை என்று சொல்லி எங்கள் மருமகன் 1வது எதிரி அழுதுவிட்டார். வீடு இடிந்துவிட்டதால் என் தங்கை, வஞ்சிப்பட்டியில் உள்ள எங்கள் பெரியம்மா வீட்டிற்குப் போய்விட்டார். நான் கூலப்பாண்டிக்குப் போய்விட்டேன். மறுநாள் காலை நான் என் தங்கைக்கு போன் அடித்தேன். அப்போது என் தங்கை என்னிடம், நந்தினியை சிவா விட்டுவிட்டு போய்விட்டதாகவும், இங்கு தான் இருக்கிறாள் என்றும் நான் அவளிடம் பேசவில்லை என்றும் சொல்லி அழுதார். நான் என் தங்கையிடம், நாகமலைபுதுக்கோட்டை போலிஸ் ஸ்டேசனுக்கு நந்தினியைக் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு சொன்னேன். அதற்கு என் தங்கை, நான் அவளோடு பேசவில்லை அவள் வீட்டில் ரூமிற்குள் இருக்கிறாள் என்று சொன்னார். நான் என் வீட்டில் இருந்து கிளம்பி, வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு என் தங்கையையும், தங்கை மகளையும் பார்க்க வஞ்சிப்பட்டிக்குப் போனேன். மலை மேல் என் பெரியம்மா வீட்டிற்குப் போனேன். நான் வஞ்சிப்பட்டியில் இறங்கி மலை அடிவாரத்தில் உள்ள வெள்ளையம்மாளிடம் பேசிக் கொண்டு இருந்தேன். அப்போது என் தங்கைக்கு போன் அடித்து வந்துவிட்டேன் என்று சொன்னேன். என் தங்கையும் என்னைப் பார்க்க வந்துவிட்டார். எங்கள் மாமா

நாட்ராசன் என்பவருக்கு போன் செய்து, நந்தினியைக் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் அதனால் வாங்க, நாகமலைபுதுக்கோட்டை ஸ்டேசனில் நந்தினியை ஒப்படைத்து வருவோம் என்று சொன்னோம். அதற்கு அவர், முதல்நாள் அவரது அண்ணன் மகனுக்கு திருமணம் நடந்துள்ளது என்றும், கணக்கை முடித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு, கொஞ்ச நேரத்தில் 11.30 மணிக்கு வந்துவிட்டார். வெள்ளையம்மாள் எங்களுக்கு டீ போட்டுக் கொடுத்தார். நாங்கள் குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது அம்மா என்று அலறல் சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு, என் தங்கை முதலில் ஓடினார், நான் ஓடினேன், வெள்ளையம்மாளும் அவரது வீட்டில் வேலை பார்ப்பவர்களும், நாட்ராசனும் ஓடி வந்தோம். அப்போது மலையில் இட்ற (மலை இடுக்கு) பாதையில், நந்தினி தீப்பிடித்து எரிந்த நிலையில் வந்தார். என் தங்கை, நந்தினியிடம் ஓடிவிட்டார். நான் நந்தினியைப் பார்த்த பயத்தில் நான் கீழே விழுந்து மயங்கிவிட்டேன். நான் முழித்து பார்த்தபோது, நந்தினி தீக்காயங்களோடு மண்ணில் கிடந்தார். நந்தினி தீ எரிந்தவாறு பறந்து வந்ததாகச் சொன்னார்கள். சுமார் 1/2 மணி நேரம் நந்தினி கீழே கிடந்தார். 108 ஆம்புலன்சிற்கு சொல்லி, நான், என் தங்கை, வீரம்மாள் ஆகியோருடன் மேலூர் அரசு மருத்துவமனைக்குச் சென்றோம். என் பெரியம்மா வீரம்மாள் வயதானவர் என்பதால் அவருக்கு வாந்தியும், மோசனும் வந்துவிட்டது. அதனால் நான் என் பெரியம்மாளை பாத்ரூம் கூட்டிச் சென்றுவிட்டேன். என் மகள் நந்தினி, அரிச்சந்திரன் என்ற சாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அவர் என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்குத் தெரியாது. நந்தினியைக் கூட்டிக் கொண்டு சென்ற தம்பி (2வது எதிரி), நடுராத்திரி கூட்டி வந்து விட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். நந்தினியின் புருஷனும் அந்த தம்பியும் (2வது எதிரி) தான் நந்தினியைக் கொன்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.24 15:18:36 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை